## பகுதி 1

**① அடைப்புகுறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமனாதைத் தெரிந்து கீறிட்டஇடங்களில் எழுதுக.**

1. ____________________ பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றாய் (அவன், நீ, நான்)

2. திரைகடல் ஓடியும் ____________________ (அறிவைத், திரவியம், புகழைத்) தேடு.

3. எவரையும் பணிவுடன் வணங்குவது (சிங்களவர், தமிழர், ஆங்கிலேயர்) ____________________ பண்பாடு ஆகும்.

4. முக்கனிகள் ____________________ (ஆப்பிள்-கொய்யா, மா-பலா வாழை, மாதுளம்பழம் - முந்திரிகைப்பழம் - தோடம்பழம்) ஆகியனவாகும்.

5. எம் இனத்தின் பெருமைக்குத் ____________________ (தீபாவளி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல்) திருநாளே சான்றாகும்.

6. நான் நேற்று ஒரு நல்ல நூலைப் படித்தேன். இதில் **'படித்தேன்'** என்பது ____________________ (நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம்)

7. **'பொற்காப்பு'** என்பதை பிரித்து எழுதினால் ____________________ ( பொன்+காப்பு, பொற்+காப்பு, பொ+ கார்ப்பு) என்பதாகும்.

8. இருவரும் ஆற்றங் ____________________ (கரை, கறை, திரை) வழியில் நடந்தனர்.

9. **'காலித்து'** என்பதைக் குறித்து நிற்கும் சொல் ____________________ (மறைதல், உதித்தல், எழும்புதல்)

10. அறநூல்களில் விழுப்பம் உடையது ____________________ (திருக்குறள், சிவப்பதிகாரம், மணிமேகலை) ஆகும்.

11. **'புள்ளினங்கள்'** என்பதைக் குறித்து நிற்கும் அதே கருத்துள்ள சொல்

____________________________ (மிருகங்கள், பறவைகள், ஊர்வன) ஆகும்.

12. ஒருவரோடு நட்பு கொண்டபின்பு அந்நட்பை விலக்குவது _________________ (இலகுவானது, கடினமானது, துன்பமானது) ஆகும்

13. பல்லவன் (அரம், அறம், மரம்)_______________________________ கொண்டு கத்தியைக் கூர்மையாக்கினான்.

14. **'வைகறை'** என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல் ____________________ (விடியற்காலை, மதியம், இரவுப்பொழுது) ஆகும்.

15. ஆடற்கலை பற்றித் துல்லியமாகக் கூறும் நூல் ________________________ (சிலப்பதிகாரம், தொல்காப்பியம், பரதநூல்)

16. தென்கிழக்காசிய நாடுகள் எங்கும் அரசாட்சி செய்த மன்னனின் பெயர்

________________________________________ (மாமன்னன்,இராசஇராசசோழன், பல்லவமன்னன்) ஆவான்.

17. **'விடை'** என்றால் __________________________ (பதில், காளை, வினா) ஆகும்.

18. 'தம்பி பாடம் படித்தான்' என்னும் சொல்லியத்தில் வரும் எழுவாய்

________________________ (படித்தான், தம்பி, பாடம்) என்பதாகும்.

19. தமிழ்மொழியிலுள்ள முதல் எழுத்துகளின் எண்ணிக்கை ______________________________ (ஐம்பது, முப்பது, பத்து).

20. பவளக்கொடியின் ஊர் _____________________________ (பருத்தித்துறை, கொக்குவில், வன்னி) ஆகும்.

21. **'இசைக்கருவி'** என்ற சொல்லைப் பிரித்து எழுதினால் ____________________ (இசை+கருவி, இசை+க்கருவி, இசைக்கு+கருவி) என்பதாகும்.

22. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பவற்றை ____________________ (ஆனைந்து, ஐம்பால், நானிலம்) என்று அழைப்பர்.

23. வைகாசி மாதம் மரங்கள் எல்லாம் ____________________ (வாடி வதங்கிக், பச்சைப் பசேலெனக், காய்ந்து வரண்டு) காணப்படும்.

24. மழை வெள்ளம் வாய்க்கால் வழியாக ____________________ (கடகட, சலசல, படபட) வென ஓடியது.

25. பயிர்கள் செழித்து வளர, பகலவனின் ____________________ (ஒலி, ஒளி, வழி) வேண்டும்.

26. (நான், நாம், நாங்கள்) ____________________ தமிழ்ப்பள்ளிக்குப் போகிறேன்.

27. ஆரச சபையில் ஆடப்படும் கலை ____________________ (வேத்தியல், பொதுவியல், எழுத்தியல்) ஆகும்.

28. வழுதி மகிழ்ச்சியாக இருந்தாள். இதில் மகிழ்ச்சி என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________________ (இன்பம், துக்கம், வன்மம்).

29. தொட்டில் ____________________ (வழக்கம், பழக்கம், மயக்கம்) சுடுகாடு மட்டும்.

30. பண்டைத்தமிழர் வணிகம் செய்வதற்குப் பயன்படுத்திய மரங்கள் ____________________ (நின்றன, நின்றது, நிற்பார்கள்)

(30 புள்ளிகள்)

**② பாடலைப் படித்து கீழே உள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

**நிலவு**

தங்கத் தட்டுப் போலவும்
தங்கை முகத்தைப் போலவும்
வானில் நிலவு மிதக்குது
முகில்கள் அதனைத் தழுவுது
குளத்தில் அல்லி பூக்குது
கடலில் அலைகள் சிரிக்குது
அழகில் உலகு மிதக்குது
மனம் அதனைக் கண்டு மகிழுது.

1. நிலவு எப்படித் தெரிகிறது?

______________________________

______________________________

2. நீரில் பூக்கும் பூ எது?

______________________________

______________________________

3. நிலவைத் தழுவுவது எது?

______________________________

______________________________

4. நிலவு என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக?

______________________________

______________________________

5. பாடலில் உள்ள ஒத்த ஓசைச் சொற்கள் இரண்டு தருக?

______________________________

______________________________

(5 புள்ளிகள்)

### ③ கீழே காணும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

சுவீடன் நாட்டில் மால்மோ எனும் இடத்தில் ஒரு மர்ம மனிதன் வெளிநாட்டுக்காரர்களைக் குறி வைத்துத் துப்பாக்கியால் அம்மக்களை நோக்கிச் சுட்டுக் கொண்டிருக்கிறான். இந்த மால்மோ எனுமிடத்தில் அந்த உயர் மாடிக்கட்டிடத்தில் வசிப்பவர்கள், ஒரு சிலரைத்தவிர, மற்ற அனைவருமே வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்டவர்கள். இம்மக்கள் அனைவரும் மிகவும் பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அம்மர்ம மனிதனைத் தேடி, நகர காவலர் வலை விரித்துள்ளனர். உயர்மாடிக்கட்டடத்தைச் சுற்றி அதிக நகர காவலர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். அந்த மர்ம மனிதன் சுவீடனில் வாழும் வெளிநாட்டவர்களை விரும்பவில்லை. இனத்துவேசத்தால் அம் மக்களை வெறுக்கிறான். இனத்துவேசத்துடன், அவன் ஒரு நோயாளியாகக் கூட இருக்கலாம். இதுவரை அவன் (மர்ம மனிதன்) பதினைந்து பேரை நோக்கி சுட்டு காயப்படுத்தியிருக்கிறான். தெய்வாதீனமாக எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை. இது மாதிரியான சம்பவம் நோர்வேயில் நடைபெற்றாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஆகவே, எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள ஆயுத்தமாவோம்.

1. அந்த மர்ம மனிதன் யாரை நோக்கி சுட்டுக்கொண்டிருக்கிறான்?

______________________________

______________________________

2. ஏன் அவன் அம்மக்களை நோக்கி சுடுகிறான்?

______________________________

______________________________

3. அம் மக்கள் எவ்வகை கட்டிடத்தில் வாழ்கிறார்கள்?

______________________________

______________________________

4. இச் சம்பவத்தில் எத்தனை பேர் காயமுற்றிருக்கிறார்கள்?

______________________________

5. இப்பந்தியிலிருந்து நீங்கள் அறிவது என்ன?

______________________________

______________________________ (15 புள்ளிகள்)

**④ கீழே அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **நீர்மேல்** | **கற்றளி** | **பரவைக்** | **நாளங்காடி** | **இராசராசசோழன்** |

1. முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்ட கோவிலை

   ______________________________ என்பர்.

2. தென்கிழக்கு ஆசிய நாடெங்கும் புலிக்கொடியைப் பறக்கவிட்ட மன்னன்

   ____________________________________.

3. பகலில் கூடும் சந்தை ______________________________ எனப்படும்.

4. ஆழமற்ற கடலை ____________________________கடல் என்று அழைப்பர்.

5. தீயவருக்குச் செய்யும் உதவி __________________ எழுத்துப் போலாகும்.

(5 புள்ளிகள்)

⑤ **பின்வரும் பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

1. பாண்டியருக்கு பரதவர் எனப்பெயர்வரக் கரணியம் என்ன?

_______________________________________________

_______________________________________________

2. ஒற்றுமையே வலிமை என்ற பாடத்தில் வரும் விலங்குகள் எவை?

_______________________________________________

_______________________________________________

3. நல்லோர் நட்பு எத்தகையது?

_______________________________________________

_______________________________________________

4. பட்டிப்பொங்கல் ஏன் கொண்டாடப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

5. பவளக்கொடியின் ஊர் எது?

_______________________________________________

_______________________________________________

(15 புள்ளிகள்)

⑥ கீழே தரப்பட்டுள்ள வாழிடமொழிச் சொல்லியங்களை உமது தாய் மொழியில் எழுதுக.

1. Jeg fikk et brev fra vennen min.

2. Den 27. November er martyr dag for Tamiler.

3. Vinteren har kommet.

4. Jeg kommer på tamilsk skole for å lære Tamil.

5. Neste uke skal jeg til ski tur sammen med klassen min.

(10 புள்ளிகள்)

⑦ **பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.**

1. **தைப்பொங்கல்**
   தமிழர் திருநாள்
   தை முதல்நாள்
   கீழ்வானம் வெளுத்தல்
   கோலமிடல்
   நிறைகுடம்
   பொங்கல் படைத்தல்
   கூடியுண்ணல்

2. **தமிழர் தொல்வணிகம்**
   வியாபாரம்
   ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள்
   நாடுகள்
   சான்றுகள்

3. **நான்**
   உமது விபரம் (பெயர் முதலியன......)
   பாடசாலை விபரம்
   பொழுதுபோக்கு

(20 புள்ளிகள்)